 ISSN: 2454-3993

# ஆவணங்கள் காட்டும் கொங்கு வேளாள மகளிர் வாழ்வியல்

**ர. சங்கமேஸ்வரன்**
உதவிப் பேராசியரியர், வரலாற்றுத்துறை
சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி
திருப்பூர்

## முன்னுரை

கொங்கு நாட்டில் வாழ்ந்த கொங்கு வேளாளப் பெண்கள் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்பட்டதாகவே ஆவணங்கள் கூறுகின்றன. நிர்வாகத்திலும் நீதிபரிபாலனத்திலும் சிறந்து விளங்கிய இவர்களிடையே பலதார மணம், உடன்கட்டை ஏறுதல் போன்ற சமூகத் தீமைகளும் நிலவியதாக ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

## கொங்கு நாடு

நம் செந்தமிழ்நாடு சேர, சோழ, பாண்டிய நாடுகளைப் போலவே தொண்டை நாடு, கொங்கு நாடு என்ற இரண்டு தனிப்பிரிவுகளையும் பழங்காலத்தில் தன்னகத்தே கொண்டிருந்தது. பழம் பெரும் இலக்கியமாகிய தண்டியலங்காரம், ‘வியன் தமிழ்நாடு ஐந்து”[1] என்றும், சைவ சமய நூல்களில் மிகத் தொன்மையானதாகக் கருதப்படுகின்ற திருமந்திரம், ‘தமிழ் மண்டிலம் ஐந்து”[2] என்றும் தமிழ்நாட்டின் ஐந்து பிரிவுகளைச் சுட்டிக் காட்டுகின்றன. கொங்குநாடு மிகப்பழங்கால முதலே தமிழகத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வந்துள்ளது.

## கொங்கு வேளாளர்

‘வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்” என்கிறது திரிகடுகம்.[3] வேளாளன் என்பதற்கு உபகாரி எனப் பொருள் கூறுகிறது தமிழ் பேரகராதி.[4] வெள்ளம் என்ற சொல்லிருந்தே வெள்ளாளர், வேளாளர், வேளாண்மை என்ற சொற்கள் வந்திருக்க வேண்டும்.[5] வெள்ளத்தை ஆண்டு பயிர்த் தொழில் செய்தவர்கள் வெள்ளாளர்கள், வேளாளர்கள் எனப் பெயர் பெற்றனர். வேளாளர் என்ற பெயர் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதலும், வெள்ளாளர் என்ற பெயர் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு முதலும் பெரு வழக்கிற்கு வந்தன.[6] வேளாளர் தமிழகம் முழுவதும் உள்ளனர். தொண்டை மண்டல வேளாளர்கள், சோழிய வேளாளர்கள், பாண்டிய வேளாளர்கள் என அவர்கள் சார்ந்திருந்த பகுதியை வைத்து அழைக்கப்படுகின்றனர். அது போலவே கொங்கு நாட்டில் வாழும் வேளாளர்கள் கொங்கு வேளாளர் என அழைக்கப்படுகின்றனர்.

## நிர்வாகத்தில் கொங்கு வேளாளப்பெண்கள்

மேல்கரைப் பூந்துறை நாட்டில் புதுப்பாளையம், புங்கம்பாடி, கொம்மக்கோவில், ஞானிபாளையம், மயிலாடி, கனகபுரம் ஆகிய ஊர்களை வெள்ள வேட்டுவரிடமிருந்து வெள்ளாள முத்துக் கவுண்டர் வாங்கி மதுரை திருமலை நாயக்கருக்கு வரி செலுத்தி வந்தார். சில ஆண்டுகளில் வரிப்பணம் செலுத்த முடியாமல் போகவே முத்துக்கவுண்டன் மனைவி திங்கர் பொன்னைய மூப்பனுக்கு பாதி காணியுரிமையைக் கொடுத்து பொருள் பெற்று மதுரைக்கு வரிபாக்கியைக் கட்டியுள்ளார் என வெள்ளோடு காணிப்பட்டயம் கூறுகிறது.[7]

## நீதி பரிபாலனம்

பெருந்துறை அருகேயுள்ள மடத்துப்பாளையத்தைச் சேர்ந்த செல்லி மகன் நாச்சிமுத்தன் சீனாபுரம் போகும் வழியில் ஒரு விநாயகர் கோவில் கட்டி அது மேதி குலத்தாருக்கும், காடான் குலத்தாருக்கும் சேர்ந்தது என்று கல்வெட்டு வைத்தான். இதை காடை குல பழனிக்கவுண்டர் இடித்து விட்டு தம்மிடமுள்ள ஆவணங்களுடன் பூந்துறை மணியம்பாளையம் பெரியகவுண்டச்சி தெய்வானையம்மாளிடம் சென்று முறையிட்டார். அவர் வழக்கை விசாரித்து காடானுக்கு 1500 பொன் அபராதமும், பழனிக்கவுண்டருக்கு மண்டபத்தை இடித்ததற்காக 1500 பொன்னும் அபராதம் கட்டுமாறு தீர்ப்பளித்தார்.[8]

**திருமணம்**

கொங்குவேளாளர் திருமணங்களில் பெண்களுக்கு சீதனம் கொடுத்து திருமணம் செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் உடல் குறைபாடுள்ள பெண்களின் திருமணத்திற்கு சில சலுகைகள் அளிக்கப்பட்டதாக ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

**வெள்ளைப்பெண் திருமணத்திற்கு காணியுரிமை அளித்தல்**

கொங்கு நாட்டில் ஆங்காங்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஆல்பினோ நோய் அக்காலத்தில் இருந்திருக்கிறது. ஆல்பினோ என்னும் நோயால் தோல் வெண்மை நிறம் பெற முடிகளும் வெளிறிய நிறத்தில் இருக்கும். பிறவியிலேயே வரும் இந்நோய் மரபணுக்களின் குறையால் தோலின் மெலனின் என்ற நிறமி குறைந்து உடல் முழுவதும் வெண்மையாகவும், வெளிறிய முடியாகவும் கண்கள் சிவப்பு நிறமாகவும் மாறி விடுகிறது.

இந்நோயுற்ற ஆணை வெள்ளச்சாமி என்றும் பெண்ணை வெள்ளையம்மாள் என்றும் அழைப்பது வழக்கம். இதனால் வெள்ளைப்பெண்ணை திருமணம் செய்து கொள்ளும் மணமகனுக்கு வெள்ளைப் பெண் பிறந்த குலத்தின் காணியுரிமையில் பங்கு கொடுக்கப்பட்டது.

ஏழு ஆவணங்களில் வெள்ளைப்பெண் திருமணத்திற்கு காணியுரிமை அளித்த செய்தி இடம் பெறுகிறது.

1. நட்டூர் காணியாளராக இருந்த சேடர்குல தலைவருக்கு பிறந்த வெள்ளைப்பெண்ணை திருமணம் செய்த கருமாபுரம் பொருள்தந்தகுலத்தின் காங்கேயன் கால்காணி பெற்றதாக காங்கய மன்றாடியார் வம்சாவளி கூறுகிறது.[9]
2. பிடாரியூர் ஈஞ்சங்குல கூத்தகவுண்டர் மகள் வெள்ளைப் பழனியம்மாளை கருமாபுரம் பொருள்தந்தகுலத்து வேலப்பகவுண்டருக்குத் திருமணம் செய்து கொடுத்து பிடாரியூர் காணியுரிமை வழங்கப்பட்டது.[10]
3. பிடாரியூர் பொருள்தந்தகுல செங்கோடகவுண்டர் மகள் வெள்ளை வேலம்மாளை வள்ளியறைச்சல் ஆந்தைகுலம் குமாரவேலப்பகவுண்டருக்கு திருமணம் செய்து கொடுத்து பிடாரியூரின் காணியுரிமையில் கால்பங்கு கொடுக்கப்படுகிறது.[11]
4. பிடாரியூர் பொருள்தந்தகுல சூரியாலிச்சாக்கவுண்டர் மகள் வெள்ளை வள்ளியம்மாளை தலையநல்லூர் கூறைகுல பொன்காளியப்பக்கவுண்டருக்கு திருமணம் செய்து கொடுத்து பிடாரியூரின் காணியுரிமையில் கால்பங்கு கொடுக்கப்படுகிறது.[12]
5. இக்கரை கத்தாங்கண்ணி சிவந்திகுலத்து தீர்த்தாக்கவுண்டர் மகள் வெள்ளைப்பிள்ளையை கன்னிவாடியிலிருந்து அக்கரைக் கத்தாங்கண்ணியில் குடியேறிய கண்ணகுலத்துச் செங்கோட்டு வேலப்பனுக்கு திருமணம் செய்து கொடுத்து இக்கரை கத்தாங்கண்ணியில் காணியுரிமை கொடுக்கப்பட்டது.[13]
6. நசியனூர் மேதிகுல செங்கோடன் நல்லதம்பிக்கவுண்டர் மகள் வெள்ளைப்பிள்ளை ஆயியம்மாளை பூந்துறை காடைகுல தம்பி நல்லையகவுண்டனுக்கு கொடுத்து பெருந்துறை காணியை 500 நாகரம் பொன்னும் , நெய்யும் கொடுத்து வாங்கி கொடுக்கப்பட்டது.[14]
7. கொங்கு கீழ்க்கரை பூந்துறை நாட்டு சித்தழுந்தூர் செங்கண்ணகுலலிங்கண்ணன், காங்கயத்தின் முதன்மைக் காணியாளரான பெருங்குடிகுலத் தலைவர் வேல்கவுண்டரின் வெள்ளைப் பெண்ணைத் திருமணம் செய்து காங்கயத்தில் முதன்மைக்காணி பெற்றதாக காங்கயம் பல்லவராயர் வம்சாவளி கூறுகிறது.[15]

**ஒரு பெண்ணின் வாழ்விற்காக குலத்தினர் பூர்வீகத்தை விட்டுக் குடிபெயர்தல்**

மும்முடி நல்லதம்பிமன்றாடியார் வழியினரான கொங்குவேளாளக் கண்ணகுலத்தினர் கன்னிவாடியில் காணியாட்சி பெற்று வாழ்ந்து வந்தனர். கண்ணகுல கந்தசாமிக்கவுண்டர் மகள் நல்லம்மாளுக்கும் பள்ளிகுலவள்ளியம்மாளுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டில் வள்ளியம்மாள் தன் அண்ணனாகிய பள்ளிவேளாளனுக்கு நல்லம்மாளைத் திருமணம் செய்து வைப்பதாக சூளுரைக்கிறாள். நல்லம்மாள் தன் வீட்டு கருநாயைக் கட்டிவைப்பதாக சபதம் செய்தாள். இவ்விரு பெண்களின் சபதமும் இரு சமூகத்தினரிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

பள்ளி வெள்ளாளர் அரசன் ஆதரவோடு பெண் கேட்ட பொழுது, கண்ணகுல வெள்ளாளர் பெண் கொடுப்பதாகக் கூறி கருநாயை பெண் போல் அலங்கரித்து நடுவீட்டில் கட்டிவிட்டு கொங்கு குடிகளாகிய தொழிலாளர்கள் உதவியோடு கொங்கு நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று குடியேறினர்.[16]

**பலதார மணம்**

கொங்கு வேளாளர் சமுதாயத்தில் வாரிசு இல்லை எனப் பல பெண்களைத் திருமணம் செய்யும் முறை இருந்துள்ளதை ஆவணங்கள் புலப்படுத்துகின்றன. கன்னிவாடி கண்ணகுல முத்துச்சாமிக்கவுண்டர் வாரிசு இல்லை என மூன்று பெண்களைத் திருமணம் செய்த தகவலை கன்னிவாடி கண்ணகுலப் பட்டயம், 'விவாக முடித்துக் கொண்டு சகலருடனே முத்துச்சாமிக் கவுண்டர் கன்னிவாடி போய்ச் சேர்ந்தார். அந்தத் தாரத்துக்குப் பிள்ளையில்லாமையால் வெள்ளைகோயில் ஆந்தைகுலச் செல்லப்பகவுண்டர் வீட்டில் கலியாணம் செய்து அதற்கு பிள்ளையில்லாதபடியால் மணநாடு வெண்டுவகுலம் காளிப்பக்கவுண்டர் வீட்டில் கல்யாணம் செய்து அதற்கும் பிள்ளையில்லாதபடியால் முத்துச்சாமிக் கவுண்டர் மூன்று கலியாணஞ் செய்து நமக்குப் பட்டத்துக்குப் பிள்ளையில்லை என்று விசனத்துடன்" எனக் கூறுகிறது.[17]

**கைம்பெண்கள் தீர்ப்பாய்தல்**

கணவனை இழந்த கைம்பெண்கள் தீப்பாய்ந்து உயிர் துறக்கும் வழக்கம் தமிழக வரலாற்றில் சங்ககாலம் தொட்டு இருந்து வந்துள்ளது. ஆனால் வடஇந்தியாவில் இருந்தது போல கட்டாயப்படுத்தித் தீப்பாய வைக்கும் நிலைக்கு மாறாக கணவனை இழந்த பிரிவுத்துயர் தாங்காது விரும்பியே கைம்பெண் தீப்பாய்ந்த செய்தி இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் கிடைக்கின்றன.

பூதப்பாண்டியன் இறந்தவுடன் நெருப்பில் பாய்ந்த பெருங்கோப்பெண்டு 'நன்னீர்ப் பொய்கையும் தீயும் எனக்கு ஒன்றே" எனக் கூறியது தெரியவருகிறது. திருக்கோவலூர் கல்வெட்டு முதலாம் இராசராச சோழனின் தாயார் வானவன்மாதேவி சுந்தரசோழன் இறந்த பொழுது உடன்கட்டை ஏறிய செய்தியைக் கூறுகிறது.

கொங்கு நாட்டில் கொங்கு வேளாளப்பெண்களும், உடன் கொங்குகுடிகளின் பணியாளப் பெண்களும் தீப்பாய்ந்த செய்தி இரண்டு ஆவணங்களில் இடம் பெற்றுள்ளன. எட்டுவேலி நிலப்பரப்பில் குழியின் அகலம் ஆறுஅடி, நீளம் ஒன்பதடி, ஆழம் பதினாறடி என வெட்டி தீ வளர்க்கப்படும். தீப்பாய்பவர் புத்தாடையாகப் பட்டாடை உடுத்தி, புனுகு, சந்தனம், குங்குமம், பூ அணிந்து ஆபரணங்கள் பூட்டிக் கொண்டு வெற்றிலை , பாக்கு, விசிறி, கண்ணாடி, எலுமிச்சம்பழம் முதலானவைகளை மடியில் கட்டிக் கொண்டு தீக்குழியை வலம் வந்த பின்பு தீயில் குதித்து உயிர் துறக்க வேண்டும் என கண்ணகுலப்பட்டயம் தீப்பாயும் குழியின் அளவுகளையும், தீப்பாயும் முறையையும் விரிவாக விவரிக்கிறது.[18]

கன்னிவாடியில் கண்ணகுலத்தார் பள்ளிவேளாளனுக்கு பெண் கொடுக்க மறுத்து கொங்கு நாட்டின் பல பகுதிகளிலும் குடியேறிய செய்தியை முன்பு பார்த்தோம். சிறிது காலத்திற்கு பிறகு கொங்கு வேளாள குடிகளாகிய நல்லராண்டி, நல்ல நாவிதன், பறைக்காளி ஆகிய மூன்று தொழிலாளர்களும் கன்னிவாடி ஆதினத்துக்கு கண்ணகுலத்தவரே தலைவனாக இருக்க வேண்டுமென்ற முடிவு செய்து கன்னிவாடியில் வாரிசாக மோரூரில் வளர்ந்த சூரியக் காங்கேயனின் மகன் முத்துசாமிக்கவுண்டரை கன்னிவாடி அழைத்து வந்து ஆதினத்துக்கு தலைவனாக்கி திருமணமும் செய்து வைத்தனர். பின்னாளில் முத்துசாமிக்கவுண்டர் இறந்த போது பத்துப் பேர் தீப்பாய்ந்து இறந்தனர்.[19]

முத்துச்சாமி கவுண்டரின் மூன்று மனைவியருள் மூன்றாவது மனைவி சந்தராயி முதலில் தீப்பாய முன்வர மற்ற இரு மனைவிகளான காளியம்மாள், வேலம்மாள் இருவரும் நாங்களும் தீப்பாய்கிறோம் என வந்தனர். இச்செய்தியறிந்து முத்துச்சாமிக்கவுண்டர் மீது விசுவாசமாக இருந்த தொழிலாளர்களில் நல்லராண்டியின் மனைவி சின்னம்மாள், எழுவராண்டி மகள் உருமாயி, நல்லாநாவிதன் மனைவி வள்ளிப்பிள்ளை, பறைக்காளியின் மனைவிகள் வஞ்சாள், மாறாள், தேவரடியாள் அங்கமுத்து ஆகிய ஆறு பெண்களும் இம்மூவருடன் தீப்பாய முற்பட்டனர். அப்பொழுது

சந்தராயி நல்லராண்டியையும், அவன் மனைவி சின்னம்மாளையும் பார்த்து நீங்கள் இருவரும் எனக்கு மாமனார், மாமியார் போல் எனவே நீங்கள் முதலில் தீயில் பாயுங்கள் எனக் கேட்டுக் கொண்டதால் நல்லராண்டியுடன் சேர்ந்து பத்துப் பேர்களும் தீப்பாய்ந்து உயிர் துறந்தனர்.[20]

பழையகோட்டை அழகன் சர்க்கரைக்கும், தென்னிலை வேட்டுவத் தலைவன் கொங்கராயனுக்கும் நடைபெற்ற தென்னிலைப் போரில் அழகன் சர்க்கரை சார்பாக போரிட்ட வீரர்களில் முத்தூர் பகுதியைச் சேர்ந்த வீரர்கள் பதிமூன்று பேர் வீரமரணம் அடைந்தனர். அவர்களின் மனைவிமார் உடன்கட்டை ஏறிய செய்தியை 'இந்த 13 பேரிட பெண்களும் வீரமா சத்தியாகப் புறப்பட்டவர்கள். அது கருமம் காணியாமரப்பட்டவர்கள் 6 பேரும் மற்றவர் 7 பேருக்கும்"[21] என முத்தூர் பட்டயம் இதனை விவரிக்கின்றது. இந்த பதிமூன்று பெண்களில் ஆறு பெண்கள் கொங்கு வேளாளப் பெண்கள். ஏழு பெண்கள் பிற இனத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

கி.பி. 16-ம் நூற்றாண்டு முதல் கிடைக்கும் ஆவணங்களின் மூலம் கொங்கு வேளாள மகளிரின் வாழ்வியலை அறியமுடிகிறது. சமயோசிதமாக வரிபாக்கியைக் கட்டி நிர்வாகத்தை தக்க வைத்ததும், அக்காலத்திலேயே ஒரு பெண் நீதி செலுத்தியதும் இக்குல பெண்கள் பெற்றிருந்த சிறப்பைக் காட்டும். வெள்ளைப்பெண்ணை திருமணம் செய்வதன் மூலமாக மணமகன் சமுதாயத்தில் உயர்நிலையை அடைவதுடன் சொத்தும் பெறுகிறான். வெள்ளைப்பெண் பிறந்த குலத்தைச் சார்ந்த பங்காளிகள் தங்கள் உரிமையில் பங்கு கொடுத்து அப்பெண்ணின் திருமணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து முடித்துள்ளனர். இதன் மூலம் நிலமும் உரிமையும் தனிநபருக்கு இல்லாமல் ஒரு குலத்திற்கு உரிமையாக இருந்துள்ளது தெரியவருகிறது. மேலும் ஒரு பெண்ணின் வாழ்விற்கு பங்கம் வரும் பொழுது அக்குலத்தினர் அனைவருமே பூர்வீகத்தை விட்டு குடிபெயர்ந்ததன் மூலம் குலத்தின் ஒற்றுமையைக் காத்த செய்தியை உணர முடிகிறது. எனினும் பிள்ளையில்லை என பலதாரமணம் புரியும் வழக்கமும், வேளாளத் தலைவன் இறந்த சமயம் தலைவனின் மனைவிகளுடன் தொழிலாளர்களின் மனைவிகளும் உடன்கட்டை ஏறுவது, போரில் இறந்த வீரர்களின் மனைவிகளும் உடன்கட்டை ஏறுவது போன்ற சமூக தீமைகளும் வழக்கத்திலிருந்ததை ஆவணங்கள் எடுத்தியம்புகின்றன.

கணவனுடன் மனைவி உடன்கட்டையேறும் வழக்கம் அரசமரபினரிடமும், மற்றவரிடமும் இருந்தமைப் பற்றி பண்டைய இலக்கியங்களும், கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் கூறியுள்ளன. வணிக மரபில் உடன்கட்டையேறும் வழக்கம் இருந்தமைக்கு ஆதிரை வரலாறே சான்று. ஆனால் கொங்கு வேளாளரிடம் உடன்கட்டையேறும் வழக்கம் இருந்தமை பற்றிய செய்திகள் இல்லை. ஆனால் கொங்கு நாட்டு வேளாளர் ஆவணங்களில் வேளாளர், வேட்டுவர், நாவிதர், தேவரடியார், பறையர், பண்டாரத்தார் முதலிய சாதியினரிடையில் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்துள்ளது என்பது வியப்புக்குரிய செய்தியாகும். ஆளும் நிலைக்கு உயர்ந்த பின் அரசமரபினைக் கொங்கு வேளாளரும் குடிகளும் மேற்கொண்டிருக்க வேண்டும்.

**சான்றெண் விளக்கம்**


1. தண்டி, தண்டியலங்காரம், நூற்பா 75, ப.156
2. திருமூலர், திருமந்திரம், எண். 1646
3. நல்லாதனார், திரிகடுகம், பாடல் 12
4. Tamil Lexion, Vol.VI, P.3844
5. Durai M.A., Rangasamy, The Surnames of the Sankam age literary and Tribal, P.152
6. S.P.Kandaswamy, The History of Kongu Vellalas (Unpublished thesis submitted to the university of Madras for the degree of Doctor of Philosophy, 1986, P.9
7. இராசு செ. (தொ.ஆ.) கொங்கு வேளாளர் செப்பேடு பட்டயங்கள், ஆவண எண்.20, வெள்ளோடு காணிப்பட்டயம், ப.97
8. மடத்துப்பாளையம் செப்பேடு, ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஈங்கூர் புலவனூர் பழனிச்சாமிக் கவுண்டரிடம் உள்ள செப்பேடு.

9. மெக்கன்சி ஆவணம் டி.3038, காடையூர் காங்கய மன்றாடியார் வம்சாவளி, தமிழ்நாடு அரசு சுவடி நூலகம், சென்னை.
10. இராசு.செ. (ப.ஆ.) கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள், ஆவண எண். 8, பிடாரியூர்ப் பட்டயம், ப.24
11. மேலது
12. மேலது, ஆ.எ. 9, பிடாரியூர்ச் செப்பேடு, ப. 24
13. மேலது, ஆ.எ. 10, கத்தாங்கண்ணிப்பட்டயம், ப. 26
14. பெருந்துறை காணிச் செப்பேடு, பெருந்துறை வெள்ளியம்பாளையம் உப்புக்காரர் வி.எம். பழனிச்சாமிக்கவுண்டரிடம் உள்ள செப்பேடு
15. மெக்கன்சி ஆவணம் டி2965, காங்கயம் பல்லவராயக்கவுண்டர் வம்சாவளி, தமிழ்நாடு அரசு சுவடி நூலகம், சென்னை
16. இராசு.செ. (ப.ஆ), மு.கு. நூ. ஆவண எண். 24, கண்ணகுலப் பட்டயம், ப. 82
17. மேலது
18. மேலது
19. மேலது
20. மேலது
21. மேலது, ஆவண எண். 34, முத்தூர்ப் பட்டயம், ப. 125